**அரசாங்கத்திற்கு உரித்தான வணிக நோக்கமற்ற நிறுவனங்கள் தொடர்பாக பொது மக்களது கருத்துக்களை கோருதல்**

“அரசாங்கத்திற்கு உரித்தான வணிக நோக்கமற்ற நிறுவனங்கள் தொடர்பாக மீளாய்வு செய்தல்” எனும் தலைப்பின் கீழ் அதிமேதகு சனாபதியவர்களினால் 2024.12.13 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் முன் மொழியப்பட்டுள்ள விடயங்களிற்கு, 2024.12.18 ஆந் திகதி அமைச்சரவையினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத் தீர்மானத்தின் பிரகாரம், அரசாங்கத்திற்கு உரித்தான வணிக நோக்கமற்ற நிறுவனங்களினால் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகள் மற்றும் கண்காணிப்பு செயற்பாடுகளை மிகச் சிறப்பாக முன்னெடுக்கும் பொருட்டு, எடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சரவைக்கு பரிந்துரைகளை முன் வைக்கும் பொருட்டு பிரதமரது செயலாளரின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அக் குழுவினது செயற்பாடுகளை வெற்றிகரமாக முன்னெடுக்கும் பொருட்டு அந் நிறுவனங்களினால் பொது மக்களுக்கு வழங்கப்படுகின்ற சேவைகளினது தராதர நிலைகளை மேலுயர்த்தும் பொருட்டு பொது மக்களிடமிருந்து முன் மொழிவுகளை பெற்றுக் கொள்வதற்கு குழு தீர்மானித்துள்ளது.

பரிந்துரைக்கப்பட்டுள்ள 166 நிறுவனங்கள் உள்ளடங்கிய பட்டியலை https://pmoffice.gov.lk/soesuggestions.php எனும் இணைய முகவரியின் ஊடாக பதிவிறக்கம் செய்யலாம். அப் பட்டியலில் குடிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பான தங்களது முன் மொழிவுகள் மற்றும் கருத்துக்களை கீழே குறிப்பிடப்படுள்ள இணைய முகவரியிலுள்ள மாதிரிப் படிவத்தை நிரப்புவதன் மூலம் அல்லது 2025.01.31 ஆந் திகதிக்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைப்பதன் மூலம் மேற்குறித்த செயற்பாட்டுக்கு தங்களது பங்களிப்பை வழங்க முடியும்.

இணைய முகவரி : https://pmoffice.gov.lk/soesuggestions.php

மின்னஞ்சல் முகவரி : soesuggestions@pmoffice.gov.lk

**பிரதமரது செயலாளர்**
பிரதமர் அலுவலகம்
2025.01.